பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

26 10 2025 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

3. அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட பல்வேறு திட்டங்கள் அனைத்தும் திமுக ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4. தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், இன்று ஆழ்ந்த காற்றழுத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்,

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள வானொலி நிலைங்கள் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் செண்பகராமன்புதூர் பகுதியில் நீரில் மூழ்கிய பயிர்களை நேரில் ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

பயிர்களின் சேத விவரங்கள் குறித்து கணக்கீடு செய்யும் பணி நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்படும் நெல் தனியார் அரவை ஆலைகளுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று திரு. மனோ தங்கராஜ் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் உள்ள நாட்டுப்புற கலைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் கலை பண்பாட்டுத்துறை சார்பில் மதுரை சங்கமம் திருவிழா நடத்தப்பட்டு வருவதாக மாநில பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு. மூர்த்தி தெரிவித்துள்ளார்.

மதுரையில் இந்த இரண்டு நாள் விழாவை தொடங்கி வைத்துப் பேசிய அவர், கடந்த நான்கு ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் இந்த விழா ஆயிரக்கணக்கான கிராமியக் கலைஞர்களை ஒன்றிணைத்துள்ளதாகக் கூறினார்.

இது நாட்டுப்புற கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவிடும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட பல்வேறு திட்டங்கள் அனைத்தும் திமுக ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நெல்கொள்முதல் நிலையங்கள் முறையாக செயல்படாமல் இருப்பதால் நெல் மூட்டைகள் தேங்கிக் கிடப்பதாக கூறினார்.

அரியலூர் மாவட்டத்தில் குடிநீர், குப்பைகளை அகற்றுதல், மின்விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகள் முறையாக செயல்படுத்தப்பட வில்லை என்று அவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு நலத்திட்டங்களை திரு. நயினார் நாகேந்திரன் பட்டியலிட்டார்.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் கந்தசஷ்டி விழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் நாளை நடைபெற உள்ளது.

இதனையொட்டி அங்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Lakshmanan - 48 Sec)

<<<<>>>>

தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று ஆழ்ந்த காற்றழுத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது மேலும் வலுப்பெற்று நாளை தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் புயலாக வலுவடைய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இது வடக்கு வடமேற்கு பகுதியில் நகர்ந்து அந்திர மாநிலம் காக்கிநாடா அருகே மச்சிலிப்பட்டினம் - கலிங்கப்பட்டினம் இடையே 28ஆம் தேதி கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

புயல் கரையைக் கடக்கும்போது மணிக்கு 100 முதல் 110 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கான தயார்நிலை குறித்து தேசிய பேரிடர் மேலாண்மைக் குழு கூட்டம், மத்திய அமைச்சரவைச் செயலர் டாக்டர் சோமநாதன் தலைமையில் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய அவர், இயற்கை சீற்றங்களால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்நிலையில், தேசிய பேரிடர் மீட்புப் படை, இராணுவம், கடற்படை, விமானப்படை, கடலோர காவல்படையின் மீட்பு மற்றும் நிவாரணக் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, மீனவர்கள் வரும் 29ஆம் தேதி வரை வங்கக் கடல் பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் 121 ட்ரோன்கள் வானிலேயே இடைமறித்து வீழ்த்தப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தை இஸ்தான்புல்லில் இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

கரீபியன் கடல்பகுதியில் அமெரிக்க இராணுவம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்று வெனிசுலா தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் வரும் 29ஆம் தேதி முதல் ரியாசி நிலையத்தில் வந்தே பாரத் விரைவு இரயில் கூடுதலாக இரண்டு நிமிடங்கள் நின்று செல்லும் என்று வடக்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு சென்னை ராயபுரம் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட வரும் பணிகளை மாநில அமைச்சர் திரு. சேகர் பாபு ஆய்வு செய்தார்.

<<<<>>>>

இராமநாதபுர மாவட்டத்தில் அடுத்த மாதம் நடைபெறும் மீனவர்கள் குறைதீர்ப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது குறைகளைத் தெரிவிக்குமாறு அப்பகுதி மீனவர்களுக்கு ஆட்சியர் திருமதி சிம்ரன்ஜீத் சிங் கலோன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம்கள் மூலம் 23 ஆயிரத்து 566 பேர் பயடைந்துள்ளதாக ஆட்சியர் திரு தர்பகராஜ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணை நிரம்பும் தருவாயில் உள்ளதால் பாலாற்று கரையோரப்பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டத்தில் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் வார விடுமுறை தினமான இன்றும் செயல்படும் என்று ஆட்சியர் திரு. மோகனச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட திருக்காலிமேடு ஏரியை தூர்வாரும் பணியை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

நவி மும்பையில் நடைபெறும் இப்போட்டி பிற்பகல் 3 மணிக்குத் தொடங்குகிறது.

<<<<>>>>

23 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

செர்பியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 59 கிலோ எடைப் பிரிவில் சரிகாவும், 53 கிலோ எடைப் பிரிவில் ஹன்சிகா லம்பாவும் இந்தப் பதக்கங்களைக் கைப்பற்றினர்.

<<<<>>>>

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாய் கார்த்திக் - தாய்லாந்தின் Thantub Suksmrarn இணை பட்டம் வென்றது.

<<<<>>>>

சென்னை சர்வதே டென்னிஸ் போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<The End>>>>